

# புரிந்துணர்வுடன் செயற்பட்டு முரண்பாடுகளைத் தவிர்ப்போம் 03

மனித சமூகம் வேறுபட்ட சிந்தனைகளையும், கருத்து பேதங்களையும் கொண்ட பிரசைகளால் ஆனதாகும். மேலும் அவர்கள் தோற்றத்தில், அளவில், அறிவுமட்டத்தில், சமூக மட்டத்தில் மட்டுமல்லாது பேசும் மொழியாலும் மற்றும் தாம் பின்பற்றும் சமயத்தாலும் ஒருவருக்கொருவர் வேறுபட்டவர்கள். இவ் வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு மக்களிடையே முரண்பாடுகள் ஏற்படுகின்றன. விலங்குகளுக்கிடையிலும் பல்வேறு தேவைகளின் அடிப்படையிலே முரண்பாடுகள் ஏற்படுகின்றன. எனினும் மனிதன் பகுத்தறிவு உள்ள விலங்காவான். எனவே அவன் புரிந்துணர்வுடன் ஜனநாயக முறையில் செயற்படுவதன் மூலம் முரண்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். இவ்வலகைக் கற்பதன் ஊடாக ஜனநாயக முறையில் செயற்பட்டு முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கும், அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கும் தேவையான தேர்ச்சிகளை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

## 3.1 முரண்பாடுகளை இனங்காண்போம்.

மனித வரலாற்றை மிக நுணுக்கமாக ஆராயும் போது முரண்பாடு என்பது புதிய ஒரு அனுபவமல்ல என்பது தெளிவாகிறது. மனிதன் முரண்பாடுகளுக்கு முகம் கொடுத்த முறையை பல்வேறு சந்தர்பங்களின் மூலம் நாம் பார்க்கலாம். மனிதன் தனக்குள்ளும், இயற்கையோடும், இனங்கள், நாடுகள் ஆகியவற்றோடும் முரண்பட்டுக் கொண்டுள்ளான்.

முரண்பாடு என்பது இசைவான ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாமல் உள்ள நிலைமை ஆகும். இம் முரண்பாடானது ஒருவருக்கு உள்ளேயும் ஏற்படும். ஒன்றுக்குமேற்பட்டவர்களிடையிலும் ஏற்படலாம். ஒருவர் ஒரு விடயம் தொடர்பாக மாறுபட்ட கருத்துகளுக்கிடையில் இசைவான ஒரு தீர்மானத்திற்கு வர முடியாமல் தத்தளிக்கும் ஒரு நிலையே ஒருவருக்குள் ஏற்படும் முரண்பாடாகும்.

முரண்பாட்டின் காரணமாக மனித நடத்தையின் பல்வேறு தோற்றப்பாடுகளை நாம் காணலாம். அவற்றுள் சில பின்வருமாறு:

| | |
|---|---|
| சண்டை | கோபம் |
| பாகுபாடு | கீழ்ப்படியாமை |
| கவலை | பயம் |
| மற்றவரைத் துன்புறுத்தல் | வெறுப்பு |
| கடுஞ் சொல் பேசுதல் | புறக்கணித்தல் |

மனிதன் இயற்கையை வெற்றிகொள்வதற்காகக் காலம் காலமாகப் பல்வேறு முரண்பாடுகளுக்கு முகம் கொடுத்துள்ளான். சவால்களை வெற்றிகொள்வதற்காகப் பல்வேறு மாற்றங்களை மேற்கொண்டுள்ளான். இதன் மூலம் மனிதன் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள இலகுவான வினைத்திறன் மிகு முறைகள் மற்றும் தந்திரோபாயங்களைக் கண்டுபிடித்தான். இதன்படி இயற்கையோடு மனிதன் ஏற்படுத்திக் கொண்ட முரண்பாடு மனிதனுக்குச் சாதகமாக அமைந்ததோடு சமூக அபிவிருத்தியிலும் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உதாரணமாக வேடுவர் யுகத்தில் நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டமையானது பல்வேறு சமூக பொருளாதார கலாசார மாற்றங்களுக்குக் காரணமாயிற்று.




**உரு 3.1 நெருப்பைக் கண்டுபிடித்தல்**

அன்றும் மனிதன் தன் குடும்பத்தோடும் அயலவர்களோடும் பல்வேறு தேவைகளை முன்னிட்டு முரண்பட்டுக் கொண்டான். உதாரணமாகப் பிறரது கால்நடைகளை அபகரித்தல், காணிகளின் பரப்பளவை விஸ்தரித்தல், மற்றும் சாதி, சமயம், மொழி, இனம், கலாசாரம் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். இதே போல இன்று வரையும் முரண்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

யாதேனுமொரு சவாலை மையமாகக் கொண்டு முரண்பாடு ஒன்று உருவாவதையும் அம் முரண்பாட்டினுள் பல்வேறு சந்தர்ப்பங்கள் இருப்பதையும் அச் சந்தர்ப்பங்களுக்கு எதிராக ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் முறையையும் பின்வருமாறு காட்டலாம்.

| | |
|---|---|
| சவால் → | ஆதிகாலத்தில் மனிதனுக்கு வனவிலங்குகள், மற்றும் இயற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பு பெறும் சவால் இருந்தது . |
| முரண்பாடு → | பாதுகாப்பு சம்பந்தமாக தமக்குள்ளும், குழுவைச் சேர்ந்த பிற அங்கத்தவர்களுக்கிடையிலும் மனப் போராட்டம் உருவானது. |
| சந்தர்ப்பம் → | வனவிலங்குகளிடம் இருந்து தம் உயிரைக் காப்பாற்றவும் தாக்குவதைத் தவிர்க்கவும் நேரிட்டது. |
| மாற்றம் → | பாதுகாப்புக்காக தம் அறிவை பயன்படுத்தி தந்திரோபாயங்களைக் கையாளல், ஆயுதங்களை உருவாக்குதல் |

மேலே குறிப்பிட்டபடி யாதேனும் ஒரு சவாலின் பெறுபேறான முரண்பாடும் அதன் பெறுபேறான மாற்றமும் சமூகத்தின் நன்நிலைப்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்கின்றது என்பது தெளிவாகின்றது. மனித சமூகம் நற்சமூகமாக மாற்றமடைய மனிதனால் மேற்கொள்ளப்பட்ட படைப்பாற்றல் மிக்க செயற்பாடுகளும் மனிதனுள் ஏற்பட்ட முரண்பாட்டு நிலைமைகளுமே காரணமாகும். இது முரண்பாட்டின் சாதகமான பக்கமாகும்.



**உரு 3.2 - 2 ஆம் உலக யுத்த அழிவு**

இதே போன்று முரண்பபாட்டின் பாதகமான பக்கத்தையும் காணலாம். அது அழிவை ஏற்படுத்தும். முரண்பாட்டினால் ஏற்பட்ட வன்முறைகள் மனித வரலாற்றிலே, பாரிய உயிர்ச்சேதங்களையும், சொத்தழிவுகளையும் ஏற்படுத்தி யுள்ளன. முதலாவது, இரண்டாவது உலக யுத்தங்கள் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

## 3.2 முரண்பாடு ஏற்படுவதற்கான காரணங்கள்.

சமூகத்தில் பல்வேறுபட்ட முரண்பாடுகளை இனங்காணலாம், இவை எளிய முரண்பாடுகளாகவும், சிக்கலான பெரிய முரண்பாடுகளாகவும் உள்ளன. மேலும் வன்முறையுடன் கூடிய, வன்முறையற்ற முரண்பாடுகளும் காணப்படுகின்றன.

குடும்ப அங்கத்தவர்களுக்கிடையியே, குடும்ப அலகுகளுக்கிடையியே, சமூக மட்டங்களுக்கிடையியே, இனங்களுக்கிடையியே, வேலை உலகினுள் ஆளணியினருக்கும் வேலை வழங்குநருக்குமிடையியே, இரு நாடுகளுக் கிடையியே அல்லது பலநாடுகளுக்கிடையியே நிலவும் தேச எல்லைப் போராட்டம், வேலை நிறுத்தப் போராட்டம், எதிர்ப்புப் போராட்டம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பெரும்பாலும் முரண்பாடு ஒன்று ஆரம்பிப்பது வன்முறையின்றியே எனினும் முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்காதவிடத்து அது வன்முறையாக மாறுகிறது.

## முரண்பாடு ஏற்படுவதற்கான சில காரணங்களும் சந்தர்ப்பங்களும்


- புரிந்துணர்வின்மை
- விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கின்மை
- பாகுபாடு காட்டல்
- ஏற்றத் தாழ்வு பார்த்தல்
- விளக்கமின்மை
- பொறாமை கொள்ளல்
- பிறர் கருத்துக்கு மதிப்பளிக்காமை
- சந்தேகம் ஏற்படல்
- உரிய மதிக்கப்பளிக்கப்படாத போது
- ஏளனத்திற்குள்ளாகும் போது
- தவறான தீர்ப்புக்குள்ளாகும் போது
- ஏமாற்றம் அடையும் போது
- உரிமைகள் மறுக்கப்படும் போது
- அநீதியான தண்டனைக்குள்ளாகும் போது

### செயற்பாடு I

- வகுப்பில் நீர் முரண்பட்ட சந்தர்ப்பமொன்றை ஞாபகப்படுத்துக.
- அம் மோதலுக்குக் காரணமான விடயங்களை ஞாபகப்படுத்துக.
- அச் சந்தர்ப்பத்தில் பெற்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தற்போது நீங்கள் எதிர்கொள்ளும் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளை விபரிக்க.
- நிகழ்காலத்திலே நீங்கள் முகம் கொடுக்கும் சவால் ஒன்றைத் தெரிவு செய்து அது ஒரு முரண்பாடாக மாறாது தீர்த்துக் கொள்வதற்கான தீர்வுகளை முன்வைக்க

## 3.3 முரண்பாடொன்று விருத்தி அடையும் முறை

முரண்பாடுகள் தோன்றிப் பல்வேறு படிமுறைகளினூடாக வளர்ச்சியடைந்து செல்வதனைக் கீழ் உள்ள வரிப்படம் காட்டுகின்றது.



**மனக்குறை ஏற்படல்** (முரண்பாடொன்று விருத்தியாகும் முதல் நிலை)

மேலே குறிப்பிட்டபடி யாதேனும் ஒரு இடத்தில் அல்லது எவரேனும் ஒருவருக்கு உரிமை இழக்கப்படல், பிரச்சினையேற்படல், தவறான தீர்ப்புக்குள்ளாகுதல், தனித்துவத்தை மதிக்காமை போன்ற எந்தவொரு சந்தர்ப்பத்தையும் மையமாகக் கொண்டு நபருக்கோ அல்லது குழந்தைக்கோ யாதேனும் ஒரு சம்பவம் ஏற்பட்டதாக உணர்ந்தால் மனக்குறை ஏற்படும். இது குடும்பத்திற்குள், அயலவர்களுடன், நிறுவனங்களுக்கிடையில், இனங்களுக்கிடையில், நாடுகளுக்கிடையில் என விரிவுபடலாம். உ- ம்: இரு குடும்பங்களுக்கிடையில் காணி எல்லை சம்மந்தமாக ஏற்படும் பிரச்சினை.

**யாதேனுமொரு சம்பவம் நடைபெறல்**

(முரண்பாடொன்று விருத்தியாகும் இரண்டாம் நிலை)

இம்மனக்குறையினால் குடும்ப அங்கத்தவர்கள் மனநிம்மதி இல்லாமல் இருப்பதால் சிறு சம்பவம் கூடப் பெரிய தவறாகத் தென்படலாம். இது இரு தரப்பினருக்கும் ஏற்படலாம்.

உ- ம் : புதிதாக வேலியைச் சீர்செய்தல்.

**தவறாகப் புரிந்து கொள்ளல்**

(முரண்பாடொன்று விருத்தியாகும் மூன்றாவது நிலை)

சம்பவம் நடைபெற்றதை மையமாகவைத்து ஒருவரை ஒருவர் தவறாகப் புரிந்து கொள்வர். இருதரப்பினருக்குமிடையிலே நடைபெற்ற கருத்துப் பரிமாற்றத்தின் போது ஏற்பட்ட தவறுகள் ஒருவரைப்பற்றி மற்றவர் தவறாகப் புரிந்து கொள்ள வழிவகுக்கலாம்.

**அமைதியின்மை ஏற்படல்**

(முரண்பாடொன்று விருத்தியடையும் நான்காவது நிலை)

மேலே குறிப்பிட்டவாறு தவறாகப் புரிந்து கொண்டு செயற்படதால் இருதரப்பினருக்கும் அமைதியின்மை நிலை தோன்றும். இதனால் அவர்களது மனப்பாங்குகளிலும் நடத்தைகளிலும் மாற்றங்கள் ஏற்படும். இதனால் அவ் இரு தரப்பினருக்குமிடையில் பிணைப்பிலே விரிசல் ஏற்படும். இரு தரப்புக்கு மிடையியே வாய்ப்பேச்சு முற்றி அவர்களது நடத்தையிலும் மாற்றங்கள் ஏற்படும்.

**நெருக்கடி நிலை ஏற்படல்**

(முரண்பாடொன்று விருத்தியடையும் ஐந்தாவது நிலை)


அமைதியின்மைக்குப் பின்னர் ஒவ்வொருவரும் அவரவர்பால் ஏற்படுத்திக்கொண்ட மனப்பாங்கு மற்றும் நடத்தைகளில் எவ்வித மாற்றமுமின்றி தம் நிலையிலேயே விடாப்பிடியாக இருப்பதனால் முரண்பாடு தீவிரமடையும். நாம் மேலே குறிப்பிட்ட சந்தர்ப்பத்தின்படி இருகுடும்பங்களுக்கிடையே அமைதி குலைந்து சமாதானம் இல்லாத நிலை காணப்படலாம்.

இதன்படி யாதேனும் ஒரு முரண்பாடு ஏற்பட முன்னர் அதற்கு அடிப்படையாக உள்ள காரணத்தை அல்லது சந்தர்ப்பங்களைச் சரியாக இனம் காண்பதன் மூலம் ஏற்படவுள்ள முரண்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். இதனை முரண்பாட்டிற்குக் காரணமான இரு தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும்.

## 3.4 முரண்பாட்டைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள்

நாம் வாழ்க்கைக் காலம் முழுவதும் பல்வேறு முரண்பாடுகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். முரண்பாடுகள் கசப்பாக இருப்பினும் இதனை வினைத்திறனுடன் கையாள்வதன் மூலம் தவிர்க்கலாம். முரண்பாட்டினால் நாம் அனுபவிக்கும் கசப்பான அனுபவங்கள் காரணமாக முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளின் தேவையை உணர்கின்றோம்.

இதற்கமைய முரண்பாடொன்று ஏற்படுமுன்பு அதனை நேரகாலத்துடன் இனங்காண முடியுமாயின் முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கலாம். முரண் பாடுகளைத் தவிர்த்துக்கொள்ளும் வழிமுறைகளைப் பின்வருமாறு காட்டலாம்.



## 3.5 முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு விருத்தி செய்து கொள்ள வேண்டிய திறன்களும் குணப்பண்புகளும்

முரண்பாடு தீர்த்தல் என்பது கூட்டு இணக்கப்பாட்டின் ஊடாக ஜனநாயக முறையிலே செயற்பட்டு முரண்பாட்டிற்கு உட்பட்ட, சம்பந்தப்பட்ட தரப்பினரின் தேவைகளை ஓரளவிற்கேனும் நிறைவேற்ற முயல்வதாகும்.

பல்வேறுபட்ட நபர்களோடு வேலை செய்யும் போது அடிக்கடி முரண்பாடுகளுக்கு முகம் கொடுக்க நேரிடுவதால் முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கு நாம் திறமைகளையும், குணப்பண்புகளையும் எம்மிடம் விருத்தி செய்து கொள்ள வேண்டும். இவ்வாறான குணப்பண்புகளும், திறமைகளும், நம்மிடம் ஏராளம் இருப்பினும் மேலும் விருத்தி செய்து கொள்ள வேண்டியவையும் உள்ளன. கீழே குறிப்பிடப்பட்டிருப்பது முரண்பாட்டினைத் தீர்ப்பதற்காக நமக்குள் விருத்தி செய்து கொள்ள வேண்டிய குணப்பண்புகள் மற்றும் திறன்கள் சிலவாகும்.

- ❖ அவதானமாகச் செவிமடுத்தல் –

  இதன் கருத்தானது சம்பந்தப்பட்டவர் கூறும் விடயத்தை உணர்வு பூர்வமாகக் கேட்டல், உடல் ரீதியான அசைவுகளை வெளிக்காட்டல் (தலை அசைத்துக் கேட்டல், நேருக்குநேர் பார்த்தல்) உதவி செய்யும் எதிர்பார்ப்புடன் ஊக்கத்துடன் செயற்படுதலாகும்.
- ❖ உணர்ச்சிகளுக்கு அடிமையாகாது பொறுமையாகச் செயற்படல்.
- ❖ உள் நோக்கங்கள் இன்றி விசுவாசமாகச் செயற்படல்.
- ❖ தூரநோக்குடன் தீர்மானம் எடுத்தல்.
- ❖ சிறந்த முறையில் மானிட இடைத்தொடர்புகளைப் பேணல்.
- ❖ பிறரிடம் கருத்துக்களைக் கேட்டல், பிறர் கருத்துத் தெரிவிக்க அவகாசம் வழங்கல், பிறர் கருத்துக்களை மதித்தல்.
- ❖ காரணத்தோடு சமர்ப்பிக்கும் விடயங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் தம் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும் நெகிழ்ச்சித்தன்மை காணப்படல்.
- ❖ சாதகமாகச் சிந்தித்தல்
- ❖ உறுதியாக இருத்தல். அதாவது, ஒருவர் தாம் கொண்டுள்ள கருத்தைத் தெரிவிக்கும் போது உறுதியாகச் சமர்ப்பித்தல்.

மேலே குறிப்பிட்ட திறன்களையும், குணப்பண்புகளையும் திடீரென நமக்குள் ஏற்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும் படிப்படியாக முயற்சி செய்தால் அடையலாம். இவ்வாறான திறன்களையும் குணப்பண்புகளையும் விருத்தி செய்து கொள்வது தனிநபர் அபிவிருத்திக்கும் சமூக அபிவிருத்திக்கும் பங்களிப்பாற்றும்.

## 3.6 முரண்பாட்டினைத் தீர்க்கும் எளிய முறைகள்

முரண்பாடுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் முரண்பாட்டில் சம்பந்தப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் தாமே வெற்றிபெற்று மற்றவர்களைத் தோல்வியுறச் செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கிலேயே செயற்படுகின்றார்கள். இதனை நாம் அன்றாட வாழ்க்கையில் காண்கின்றோம். இம் மனப்பாங்கு காரணமாக முரண்பாடுகள் கூடுமேயொழியக் குறைய மாட்டாது.


முரண்பாட்டின் இறுதித் தீர்வு பின்வருவனவற்றில் ஒன்றாகவே காணப்படும்.

- இரு சாராரும் வெற்றி பெறல்
- ஒரு சாரார் வெற்றி பெறல்
- இரு சாராரும் தோல்வியுறல்

ஜனாநாயக முறையிலே முரண்பாடுகளுக்குத் தீர்வு காணுகின்ற பொழுது இரு சாராருக்கும் வெற்றி கிடைக்கும் இவ் வெற்றியின் மூலம் இரு சாராரினதும் முழுத் தேவைகளும், விருப்பங்களும் பூர்த்தி செய்யப்படும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. இரு சாராரும் வெற்றியடைய வேண்டுமாயின் விட்டுக் கொடுத்துச் செயற்படுதல் அவசியமாகும். முரண்பாட்டுத் தீர்வுச் செயற்பாட்டின் போது முரண்பாட்டில் சம்மந்தபடாத ஒருவரின் மத்தியஸ்தமும் அவசியமாகும்.

**செயற்பாடு II**

முரண்பாட்டைத் தீர்ப்பதனை விளக்கும் முகமாகக் கதையொன்று படவடிவில் உள்ளது. இப்படங்களை அவதானித்து மாணவர்கள் குழுக்களாக இயங்கி, கதையொன்றை உருவாக்குங்கள்



யாதேனும் ஒரு முரண்பாட்டினைத் தீர்ப்பதற்குப் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றலாம்.

**கட்டம் – 1**

முரண்பாட்டிற்குக் காரணமான சம்பவத்தை ஒவ்வொரு தரப்பினரதும் தேவைக்கு அமைய விளக்குவதற்குச் சந்தர்ப்பம் வழங்கல். அதாவது ஒவ்வொருவருடைய தேவைகளையும், சந்தேகங்களையும் அறிதல்.

**கட்டம் – 2**

சம்பந்தப்பட்ட இருதரப்பினர் சார்பாகப் பிரச்சினையை ஆய்வு செய்து இனம் காணல்.

**கட்டம் – 3**

இரு தரப்பினரிடமிருந்தும் இயலுமானவரை மாற்றுத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளல். ஒரு தரப்பினரின் தீர்வுக்கு மறுதரப்பினரும் எதிர்ப்புத் தெரிவிக்கும் பட்சத்தில் இரு தரப்பினரும் இணங்கும் தீர்வை ஆலோசித்தல். இதற்கு வினைத்திறனுடன் சிந்தித்தல் அவசியமாகும்.

**கட்டம் – 4**

இரு தரப்பினரும் சமர்ப்பித்த மாற்றுவழிகளை மதிப்பிடல்.


**கட்டம் – 5**

சிறந்த மாற்று வழியைத் தெரிவு செய்தல். அதை நடைமுறைப்படுத்தும் முறையை இரு தரப்பினரையும் கொண்டே திட்டமிடல்.

**கட்டம் – 6**

தீர்வை நடைமுறைப்படுத்தும் போது அவற்றை மதிப்பிடல். தெரிவு செய்த மாற்றுத் தீர்வை நடைமுறைப்படுத்தும் போது பொருத்தமற்றதாக உணர்ந்தால் திரும்பவும் முதலாவது கட்டத்துக்கே செல்லல்.

மோதலைத் தீர்க்கும் கட்டங்களைப் பின்வரும் சுழற்சி அட்டவணை மூலம் காட்டலாம். தீர்வு பொருத்தமற்றதாயின் மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தொடங்க வேண்டும்.




## செயற்பாடு III

உங்கள் வகுப்பறையினுள் அல்லது வீட்டினுள் முரண்பட்ட சந்தர்ப்பமொன்றைத் தெரிவு செய்து அதனைத் தீர்ப்பதற்கு நீங்கள் கையாளும் வழிமுறைகளைக் கட்டம் கட்டமாக எழுதுக.

## ***சாராம்சம்***

❖ முரண்பாடானது அன்று தொட்டு இன்றுவரை ஏற்பட்டுக் கொண்டே வருகின்றது.

❖ முரண்பாடென்பது இணக்கமான நிலைக்கு வரமுடியாமல் உள்ள நிலை ஆகும்.

❖ முரண்பாடு ஒருவருக்குள்ளும் ஏற்படலாம்; இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டோர்க்கிடையிலேயும் ஏற்படலாம்.

❖ முரண்பாட்டினால் சண்டை, புறக்கணிப்பு, கோபம், போன்ற விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும்.

❖ புரிந்துணர்வின்மை, விட்டுக்கொடுக்காமை, உரிமைகள் மறுக்கப்படுதல் போன்ற பல காரணங்களினால் முரண்பாடு ஏற்படுகின்றது.

❖ முரண்பாடு பல்வேறு கட்டங்களாக விருத்தி அடைந்து வரும்.

❖ ஒத்துழைப்புடன் செயற்படுதல், விடயங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளல், சரியான தீர்மானம் எடுத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் முரண்பாட்டைத் தவிர்க்கலாம்.

❖ முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்குப் பல திறன்களை நாம் வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.